(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 29.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூன் 07 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் முன் சவால் செய்யப்பட்ட ‘பால்நிலைசார் சமத்துவம்’ சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

‘பால்நிலைசார் சமத்துவம்’ என்ற சட்டமூலத்தின் சட்டபூர்வ நிலை தொடர்பான உயர் நீதிமன்ற தீர்ப்பு பின்வருமாறு:-

குறித்த சட்டமூலம் அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரைக்கு அமைய முரணானதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அத்துடன், சட்டமூலத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள், உறுப்புரையின் 9,10,12,14(1) (உ) மற்றும் 27(1) (எ) உறுப்புரைகளுக்கு ஏற்புடையதல்லவெனவும் உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின் 4,7,17,18,25,26 மற்றும் 27 ஆம் பிரிவுகள் அரசியலமைப்பின் 9,10,12 (1),14(1) (உ) , 14(1) (ஊ) மற்றும் 27(1)(எ) உறுப்புரைகளுக்கு ஏற்புடையதல்லவெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சட்டமூலத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 5 மற்றும் 6ஆம் பிரிவுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பேரவைக்கு அதிகாரமளித்தல் அரசியலமைப்பின் 9,10,12(1), 14(1)(உ),14(1)(ஊ) மற்றும் 27(1)(எ) உறுப்புரைகளுக்கு ஏற்புடையதல்லவெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பால்நிலைசார் சமத்துவப் பேரவையின் தேவை பற்றி குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் 17 மற்றும் 18 ஆம் பிரிவுகள் மற்றும் பேரவையின் இயக்கம், முகாமைத்துவம், அதிகாரங்களை செயற்படுத்தல் மற்றும் பணிகளை

நிறைவேற்றுவதனுடன் இணைந்த ஏற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் 8 தொடக்கம் 16 வரையான மற்றும் 19 தொடக்கம் 24 வரையான பிரிவுகளின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 9,10,12(1), 14(1)(உ), 14(1)(ஊ) மற்றும் 27(1)(எ) உறுப்புரைகளுக்கு ஏற்புடையதல்லவெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சட்டமூலத்தின் நோக்கங்கள் அரசியலமைப்பின் 3,4(ஈ), 9 மற்றும் 10 பிரிவுகளுக்கு ஏற்புடையதாகாத அதேநேரம் அவற்றை சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகளிலிருந்து பிரிக்கவும் முடியாது. ஆகவே மொத்தமாக நோக்குமிடத்து இச் சட்டமூலம் அரசியலமைப்பின் 3,4(ஈ), 9 மற்றும் 10 ஆம் பிரிவின் உறுப்புரைகளுக்கு ஏற்புடையதல்லவென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்பின் 80 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 83 மற்றும் / அல்லது 84 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு சட்டமூலத்துக்கு சார்பாக வழங்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை (சமூகமளிக்காத உறுப்பினர்களுடன்) பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றின் இரு பங்கிற்கு குறையாத எண்ணிக்கையாகவிருந்தால் ஒழிய , மற்றும் கருத்துக்கணிப்பின்போது பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் ஒழிய முழுமையாக எடுத்துநோக்கும்போது குறித்த சட்டமூலத்தை ஒரு சட்டமாக்க முடியாதென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இன்றைய தின கூட்டக் குறிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் உயர் நீதிமன்றத் தீர்மானம் அச்சிடப்பட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

" 'இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 (2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்கள் சபாநாயகரால் மேலதிக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:-

கௌரவ கனக ஹேரத்

கௌரவ டி.வீ. சானக

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ லலித் வர்ண குமார"

**III**

" 'தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு கௌரவ ஜகத் சமரவிக்ரம அவர்களை மேலதிக உறுப்பினராக நியமித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

**IV**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன அவர்கள் 2024 மார்ச் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்."

**V**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லலித் வர்ண குமார அவர்கள் 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்."

**2. பத்திரங்களைச் சமர்ப்பித்தல்:** (1) கல்வி அமைச்சர், (2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டினை சமர்ப்பித்து இக் குறைநிரப்பு மதிப்பீடு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர் –

(i) 2023 ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2023 ஆம் ஆண்டுக்கான அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2023 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(vi) 2023 ஆம் ஆண்டுக்கான அரச நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேலுள்ளவைகள தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர்-

(i) 2023 ஆம் ஆண்டுக்கான தேர்தல் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான மொனராகலை, ஹம்பாந்தோட்டை மற்றும் வவுனியா மாவட்டச் செயலகங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேலுள்ளவைகள வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கல்வி அமைச்சர் —

(i) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை;

(ii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இரத்தினபுரி மாவட்டச் செயலகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(iii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேர்தல் ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேலுள்ளவைகள அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2024.04.05 முதல் 2024.04.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்பித்து இவ்வறிக்கை ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) கல்வி அமைச்சர், வழிவகைகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124(6) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை வழிவகைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இளைஞர் படையணியின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11 ) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களினால் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ii) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான கட்டளை; மற்றும்

(iii) 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழான அறிவித்தல்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ டீ. வீரசிங்க அவர்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விலங்கின நலம்பேணல் சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) சீனத்துறைமுகம், தான்யகம, ஜயநிவச பிரதேச சுகாதார நிலையத்திற்கு அருகாமையில், இல. 43/1 இல் வதியும் திரு. எச்.ஏ.பி. தர்மசேனவினது 2023.11.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்தார்.

(2) திக்வெல்ல, பொல்கஹமுல்ல எனும் முகவரியில் வதியும் திரு. பி.ஏ. கருணாசேனவினது 2024.03.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வீரசுமன வீரசிங்க சமர்ப்பித்தார்..

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள் ( இல. 1 ):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப்பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 54 மற்றும் 55 ஆம் இலக்க பிரரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

ஒழுங்குவிதிகள் சபை அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

**8. அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 மே 21 ஆம் திகதிய 2385/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

பிரகடனம் சபை அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

**9. பொது தனிசு முகாமைத்துவ சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.23 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமைத் தாங்கினார்.)

"கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிப்பிட்டிய தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.33 மணிக்கு கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிப்பிடிய தலைமை தாங்கினார். )

"கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக" என கௌரவ ஊடக இராஜங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.44 மணிக்கு கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிப்பிடிய தலைமை தாங்கினார்)

(பி.ப. 4.46 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார். )

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

*சபாநாயகர் தலைமை தாங்கினார்.*

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 4 முதல் 7 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவிடும் அலகுகள்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நடுத்தரக்கால மூலோபாயத்திலிருந்து ஒரு நீண்டகால மூலோ"; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ருக்கின்றவாறு, நடுத்தரகாலத்திலிருந்து நீண்ட";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 மற்றும் 5 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

6 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 6 முதல் 11 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) அரசாங்கத்தின் நிதிசார் நியதிநிபந்தனைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்பெறுகைகள், வேறு கடன் ஒழுங்கேற்பாடுகள் மற்றும் தனிசு முகாமைத்துவச் செயற்பாடுகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்துதல்:

ஆயின், இருபுடை மற்றும் பல்புடை முகவராண்மைகளிலிருந்தான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்"; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 6 முதல் 8 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஏ) இச்சட்டத்திற்கிணங்க அரசாங்கத் தனிசின் உரிய நேரத்திலான சேவையளிப்பு”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

6 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(இ திறைசேரியின் அரசிறைக் கொள்கை”; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“பணிப்பாளர் தலைமையதிபதி;

(உ) திறைசேரியின் தேசிய வரவுசெலவுத் திட்டம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஊ) திறைசேரியின் பகிரங்கத் தொழில்முயற்சிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“யான அபிவிருத்தி உதவியின் மீது சந்தையிலான”; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஈ) 3 ஆம் பிரிவின் கீழான குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காக ”; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 20 ஆம் மற்றும் 21 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆண்டுக்காகத் தயாரிக்கப்படுகின்றதோ அந்த ஆண்டினது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 26 முதல் 29 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நோக்கங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சுழற்சிமுறையான ஐந்தாண்டு எல்லையின்மீது வருடாந்தம் வகுத்தமைக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட மூலோபாயம், அடுத்துவரும் நிதியாண்டாகவும் அடுத்துறும் நான்கு நிதியாண்டுகளாகவும் அமைவதுடன் பின்வருவனவற்றைக் கவனத்திற்கெடுத்தலும்;"; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(உ) மூலோபாயத்தைத் தயாரிப்பதற்காக";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) இலங்கை அரசாங்கத்தின் தனிசு, திரட்டு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலான ஏதேனும்"; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஏ) இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(2) ஓராம் உட்பிரிவின் கீழ்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 29 ஆம் மற்றும் 30 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“விளைகின்ற அரசாங்கத்துக்கான ஏதேனும் ஆகுசெலவு மத்திய வங்கியினால் முழுமையாக;”; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“தனிவேறான விடமொன்றாக அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 முதல் 19 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

20 ஆம் வாசகம்

17 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ருப்பதில்லை; அத்துடன்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனும்” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 ஆம் வாசகம்

